பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
03 08 2024 7 15
சனிக்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இயற்கை வேளாண்மையை ஊக்குவித்து, நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதற்கான முயற்சியை இந்தியா மேற்கொண்டிருப்பதாக பிரதமர் திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. இல்லந்தோறும் தேசியக் கொடி ஏற்றும் இயக்கத்தில் நாட்டு மக்கள் உற்சாகத்தோடு பங்கேற்க வேண்டுமென்று மத்திய அமைச்சர் திரு அமித்ஷா கேட்டுக் கொண்டுள்ளார்.
3. மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள எட்டு அதிவிரைவு நெடுஞ்சாலை திட்டங்கள் மூலம் கூடுதல் வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்று மத்திய இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.
4. கடந்த பத்து ஆண்டுகளில் உடல் உறுப்பு தானம் செய்தவர்களின் எண்ணிக்கை நான்கு மடங்கு அதிகரித்துள்ளதாக மத்திய சுகாதாரத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல் தெரிவித்துள்ளார்.
5. பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கிப் போட்டியில் நாளை நடைபெறும் காலிறுதி ஆட்டத்தில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

[]<<<>>>[]

வேளாண்மைத் துறையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து விவசாயிகளுக்கான வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று 32-வது சர்வதேச வேளாண் விஞ்ஞானிகள் கருத்தரங்கில் உரையாற்றிய அவர், நாட்டின் பொருளாதார கொள்கையின் மையமாக வேளாண்மை இருப்பதாக தெரிவித்தார்.

உள்நாட்டு தேவைகள் மட்டுமன்றி உலகளாவிய உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைள் மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

தானிய வகைகள், பால், பருப்பு மற்றும் நறுமணப் பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியா திகழ்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

ரசாயனம் இல்லாத இயற்கை உரங்களை பயன்படுத்தி சாகுபடியை மேற்கொள்வதற்கு விவசாயிகள் ஊக்கப்படுத்தப்பட்டு வருவதாகவும், நடப்பு ஆண்டு பட்ஜெட்டில் இதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு நீடித்த வேளாண் வளர்ச்சிக்கான இலக்குகளை எட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த பத்து ஆண்டுகளில் பருவநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையிலான தொள்ளாயிரத்துக்கும் மேற்பட்ட புதிய பயிர் வகைகளை வேளாண் விஞ்ஞானிகள் உருவாக்கி தந்திருப்பதாகவும் அவர் கூறினார்,

வேளாண் துறையை மேம்படுத்த மின்னணு தொழில்நுட்பம் ஆக்கப்பூர்வமாக பயன்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரதமரின் விவசாயிகள் வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் பத்து கோடிக்கும் மேற்பட்ட விவசாயிகளின் வங்கி கணக்குகளுக்கு ஒரே நொடியில் பணம் செலுத்தப்பட்டு வருவதாகவும் திரு நரேந்திரமோடி கூறினார்.

[]<<<>>>[]

இல்லந்தோறும் தேசியக் கொடி ஏற்றும் இயக்கத்தில் நாட்டு மக்கள் உற்சாகத்தோடு பங்கேற்க வேண்டுமென்று மத்திய அமைச்சர் திரு அமித்ஷா கேட்டுக் கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் சுதந்திர தினத்தை முன்னிட்டு இம்மாதம் ஒன்பதாம் தேதி தொடங்கி 15-ஆம் தேதி வரை அனைத்து மக்களும் தங்களது வீடுகளில் புதிய எழுச்சியோடு மூவர்ணக்கொடியை ஏற்ற வேண்டுமென்று கூறியுள்ளார்.,

கடந்த இரண்டு ஆண்டுகளாக பிரதமர் திரு நரேந்திரமோடி இந்த இயக்கத்தை தேசிய இயக்கமாகவே நடத்தி வருவது பெருமைக்குரியது என்றம் திரு அமித்ஷா குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் மூலை முடுக்கில் உள்ளவர்கள் உட்பட அனைத்து மக்களுக்கும் ஒற்றுமை உணர்வை தூண்டும் வகையில் மூவர்ண தேசியக் கொடி ஏற்றும் இயக்கம் அமைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கடந்த ஆண்டுகளைப் போலவே தேசிய கொடியுடன் செல்பி புகைப்படம் எடுத்து **Har-Ghar-tiranga** இணையதளத்தில் பகிர்ந்து நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டுமென்றும் திரு அமித்ஷா கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ள புதிய எட்டு அதிவிரைவு நெடுஞ்சாலை திட்டங்கள் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் நான்கு கோடியே 42 லட்சம் மனித வேலை நாட்கள் இந்த அதிவிரைவு நெடுஞ்சாலை திட்டங்கள் மூலம் கிடைக்க வாய்ப்பு உள்ளதாகக் கூறியுள்ளார்.

மேற்குவங்கம், உத்திரபிரதேசம், ஜார்க்கண்ட், சத்திஷ்கர் உள்ளிட்ட மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தேசிய அதிவிரைவு திட்டங்களினால் பிரதமர் திரு நரேந்திரமோடியின் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற தொலைநோக்குத் திட்டம் நிறைவேறும் என்றும் திரு எல் முருகன் கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

2047-ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதற்கான முயற்சிக்கு சுற்றுலாத்துறை முக்கிய பங்காற்றி வருவதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திரசிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார்.

நொய்டாவில் இன்று நடைபெற்ற ஏழாவது இந்திய சர்வதேச விருந்தோம்பல் கண்காட்சியை தொடங்கி வைத்து பேசிய அவர், சுற்றுலாத் துறையையும், விருந்தோம்பலையும் ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாகக் கூறினார்.

சர்வதேச விருந்தோம்பல் கண்காட்சி கடந்த ஆறு ஆண்டுகளாக நடத்தப்பட்டு, இந்த துறைக்கு புத்துயிரூட்டப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறையில் எண்ணற்ற வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்த அவர், இவற்றை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

மக்களுக்குத் தேவையானவற்றை வழங்குவதில் வேளாண்மையும், சுற்றுலாத்துறையும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் மேலும் பல சுற்றுலாத் தலங்களை உருவாக்குவதற்கான முயற்சியை மத்திய அரசு மேற்கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்

பொருளாதார வளர்ச்சியில் சுற்றுலாவுக்கு முக்கிய பங்கு உண்டு என்பதை கருத்தில் கொண்டு அதனை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளை அனைவரும் மேற்கொள்ள வேண்டுமென்றும் திரு கஜேந்திரசங் ஷெனாவத் கேட்டுக் கொண்டார்.

**[]<<<>>>[]**

14-வது உறுப்புதான தினம் இன்று நாடு முழுவதும் கடைபிடிக்கப்பட்டது.

இந்நாளையொட்டி மத்திய சுகாதார அமைச்சகத்தின் கீழ் செயல்படும் தேசிய உடல் உறுப்பு மற்றும் திசு மாற்று அறுவை சிகிச்சைக்கான நிறுவனம் இன்று புதுதில்லியில் உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.,

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய சுகதாரத்துறை இணை அமைச்சர் திருமதி அனுப்பிரியா படேல், கடந்த பத்து ஆண்டுகளில் உடல் உறுப்பு தானம் செய்தவர்களின் எண்ணிக்கை நான்கு மடங்கு அதிகரித்திருப்பதாகத் தெரிவித்தார்.

உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு உதவி வரும் குடும்பங்கள் மற்றும் மருத்துவர்களுக்கு தமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதாகவும் அவர் கூறினார்.

மூளைச்சாவு அடைந்து உடல் உறுப்பு தானம் அளித்தவர்களின் குடும்பத்தினரையும் அமைச்சர் இந்நிகழ்ச்சியில் கௌரவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய நித்தி ஆயோக்கின் சுகாதார பிரிவுக்கான உறுப்பினர் டாக்டர் வி கே பால் உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வை அனைத்து மக்களிடமும் கொண்டு செல்ல வேண்டுமென்று வலியுறுத்தினார்.

நாடெங்கிலும் உள்ள பல்நோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனைகளை உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைக்கான வசதிகளையும் ஏற்படுத்த வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழகத்திலும் உடல் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மாநிலத்தின் பல பகுதிகளில் இது தொடர்பான விழிப்புணர்வு பேரணிகளும் இன்று நடைபெற்றன.

[]<<<>>>[]

நிலச்சரிவினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட கேரள மாநிலம் வயநாட்டைச் சேர்ந்த மக்களுக்கு பொதுத்துறை காப்பீட்டு நிறுவனங்கள் விரைந்து உதவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பாக மத்திய நிதி அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், பிரதமரின் ஜீவன் ஜோதி திட்டத்தின் கீழ் பாலிசி எடுத்தவர்களுக்கு விரைந்து காப்பீட்டுத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆவணங்களை அளிப்பதில் தளர்வுகள் அளிக்கப்பட வேண்டுமென்றும், விரைவாக காப்பீட்டுத்தொகை அளிக்கப்பட்டால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயநாடு, பாலகாடு, கோழிக்கோடு, மலப்புரம், திரிசூர் மாவட்டங்களில் உள்ள பாலிசிதாரர்கள் அதிக அளவில் காப்பீட்டுத் தொகை கோரி விண்ணப்பித்திருப்பதாகவும், அவர்களின் மனுக்களுக்கு காப்பீட்டு நிறுவனங்கள் விரைந்து தீர்வு காண வேண்டுமென்றும் மத்திய நிதி அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்வித பிரச்சினையுமின்றி அவர்களுக்கான காப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும் நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் ஆடிப்பெருக்கு விழா இன்று கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

மக்கள் ஆறுகளில் புனித நீராடி, கரையோரப் பகுதிகளில் படையலிட்டு வழிபட்டனர்,

இந்த ஆண்டு காவிரியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியதால் மக்கள் மகிழ்ச்சியோடு ஆடிப்பெருக்கை கொண்டாடியதாக எமது கரூர் செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*( வாய்ஸ்பைட் - பாலகிருஷ்ணன் ) -40----- செகண்ட்*

நெல்லை குறுக்குத்துறை தாமிரபரணி ஆற்றின் கரையோரப் பகுதியில் சுமங்கலிப் பெண்கள் கும்ப கலசம் வைத்து காவிரியையும், தாமிரபரணியையும் தாயாக பாவித்து வணங்கியதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

*( வாய்ஸ்பைட் - திருமலை ) -39--- செகண்ட்*

**[]<<<>>>[]**

இந்தோனேஷியாவின் மத்திய கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள பப்புவா மாகாணத்தில் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் ஐந்தாக பதிவானது.

இந்த நிலநடுக்கத்தால் உயிரிழப்போ, பொருட்சேதமோ இருப்பதற்கான தகவல்கள் எதும் இல்லை.

**[]<<<>>>[]**

பாரிஸ் ஒலிம்பிக் ஹாக்கி போட்டிக்கான காலிறுதி ஆட்டங்களில் பங்கேற்கும் அணிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

நாளை நடைபெறவுள்ள காலிறுதி ஆட்டத்தில் இந்தியா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

மகளிர் 25 மீட்டர் துப்பாக்கிச்சுடும் போட்டியின் இறுதியாட்டத்தில் இந்தியாவின் மனு பாக்கர் நான்காவதாக வந்து பதக்கம் பெறும் வாய்ப்பை தவறவிட்டார்.

***End of News***